



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (23.10.2024) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களிடம் புது தில்லியில் 22.10.2024 அன்று குடியரசு தலைவர் அவர்களால் தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை திருச்சி மண்டலம், புதுக்கோட்டை மாவட்டம், தெற்கு வெள்ளாறு வடிநில கோட்டம் பரம்பூர் பெரிய கண்மாய் நீரினை பயன்படுத்துவோர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட நீர்மேலாண்மைக்கான ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்தின் தேசிய நீர் விருது 2023 ஐ காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின் போது நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சங்கத்தின் தலைவர் ப. பொன்னையா, ஆட்சி மன்ற உறுப்பினர் ரா. பழனிசாமி, நீர்வளத் துறை செயற்பொறியாளர் திருமதி வே. கனிமொழி, நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் சா. மன்மதன் ஆகியோர் உடனிருந்தனர்.



கலைஞர் தொலைக்காட்சி தலைமை செய்தி ஆசிரியர் ப.திருமாவேலனின் தாயார் அண்மையில் மறைவெய்தினார். கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற தி.மு.க. குழு பொருளாளர் ஜெகத்ரட்சகன் ஆகியோர் திருமாவேலன் இல்லம் சென்று அவரது தாயார் மறைந்த ப.முத்துலக்குமி அம்மையார் திருவுருவப் படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

# ஒரு சிறு குழந்தையின் ஏக்கம்!



**அன்புள்ள கலைஞர் தாத்தா,**

48 ஆண்டுகளுக்கு முன்னால் ரயில் நிலையத்தில் என் தாத்தா செய்தித்தாள்களை விற்றுக்கொண்டிருந்தார். ஒரு முறை ரயிலிலிருந்து என் தாத்தாவை நீங்கள் அழைத்து, எல்லாச் செய்தித்தாள்களிலும் ஒவ்வொன்று கொடுக்கச் சொன்னீர்கள். ஒரு ரூபாய், பத்து பைசா என்று தாத்தா உங்களிடம் கையை நீட்டினார். "என்ன தம்பி, விரல் எல்லாம் மையா இருக்கு" என்று நீங்கள் கேட்டீர்கள். "பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னார் என் தாத்தா. உடனே தாங்கள் 2 ரூபாயைக் கொடுத்து, "மீதிப் பணத்தில் மை கசியாத நல்ல பேனா வாங்கிக்கொள்" என்று சொன்னீர்கள். 'கறுப்புக் கண்ணாடிக்குள் அன்று கருணையான கண்களைக் கண்டேன்' என்று என் தாத்தா அடிக்கடி இந்த நிகழ்வைக் கூறுவார். தங்களைக் காண நானும் தாத்தாவும் சென்னைக்கு வந்தோம். மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தங்களைப் பார்த்தபோது, நேரில் பார்க்க முடியவில்லையே என்கிற ஏக்கம் அதிகமாகிவிட்டது, கலைஞர் தாத்தா!

தங்களை என்றும் மறவாத,

**யூ.காட்வின் பிரிட்ஜோ,**

**5ம் வகுப்பு, ஸ்ரீ காமராஜர் மெட்ரிக் பள்ளி, திண்டுக்கல்.**

**நன்றி : இந்து தமிழ் திசை 23.10.2024**

### திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்க

# நெசவாளர்களுக்கு ரூ.5 கோடி போனஸ் - டிவிடெண்ட்!

## உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்!

தஞ்சாவூர் அக்.25-

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் அருகே உள்ள திருபுவனத்தில் சுமார் 1,800 நெசவாளர்களை உறுப்பினர்களாக கொண்ட திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் 2023 2024ம் ஆண்டிற்கான சங்கத்தின் 69 வது பொதுப்பேரவை கூட்டம் நேற்று முன்தினம் காலை சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சங்க உறுப்பினர்களுக்கு குறைந்துள்ள போனஸ் தொகையை அதிகரித்து வழங்குவது தொடர்பாக கைத்தறி துறை அமைச்சரிடம் பெற்ற அனுமதியுடன் கைத்தறி இயக்குநர் ஆணையின்படி சென்ற ஆண்டில் வழங்கப்பட்ட போனஸ் ரூ.1க்கு 0.38 பைசாவைவிட அதிகமாக ரூ.1க்கு 0.40 பைசா போனஸாகவும் டிவிடெண்ட் 14 சதவீதம் எனவும் அறிவித்து போனஸ் மற்றும் டிவிடெண்டிற்கான கூடுதல் தொகை ரூ.4.96 கோடியை அங்கத்தினர்களுக்கு போனஸாக வழங்கினார்.

இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கும்பகோணம் மாநகர துணை மேயர் சு.ப. தமிழழகன், கூகூர் ஊராட்சி மன்ற தலைவர் சி.அம்பிகாபதி திகோ சில்க்ஸ் மெட்ரிக் பள்ளி தாளாளர் எஸ்.கே. பஞ்சநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் திருவிடைமருதூர் ஒன்றிய குழு தலைவர் சுபா திருநாவுக்கரசு, திருவிடைமருதூர் பேரூராட்சி துணைத் தலைவர் சுந்தர. ஜெயபால், திருபுவனம் பேரூராட்சி மன்ற தலைவர் அமுதவல்லி கோவிந்தன், மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கைத்தறி துறை அலுவலர்கள், முன்னாள் நிர்வாகக்குழு தலைவர் மற்றும் நெசவாளர் உறுப்பினர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் சங்க வளர்ச்சியினை கருத்திற் கொண்டும் சங்க அங்கத்தினர்களின் வாழ்வாதாரத்தினை கருத்திற் கொண்டும் தீர்மானங்கள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. மேலும் அங்கத்தினர்களால் கேட்கப்பட்ட வினாக்களுக்கு சங்க செயலாட்சியர் கி.கிரிதரன் விளக்கம் அளித்து பேசினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் கோவி.செழியன் பேசுகையில், மீன்பிடி தடை காலங்களில் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவது போல கைத்தறி நெசவாளர்களுக்கும் நிவாரணம் வழங்குவது குறித்த நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வேன். மேலும் பட்டு கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் தேங்கியிருக்கும் பட்டுப் புடவைகளை விற்பனை செய்வதற்கு ஏதுவாக தள்ளுபடி வழங்குவதற்கும் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பட்டுப் புடவை களை விற்பனை செய்வதற்கு அரசு தள்ளுபடி கிடைக்க நடவடிக்கை எடுப்பேன். கைத்தறி துறை அமைச்சரை நமது தொகுதிக்கு அழைத்து உள்ளேன். அவர் வரும்போது நெசவாளர்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து நேரில் சந்தித்து தெரிவிக்கலாம்.

இவ்வாறு அவர் பேசினார்.




# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..! கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன், தி.மு.க இளைஞர் அணி நடத்தும் 'என் உயிரினும் மேலான..!' பேச்சுப் போட்டியில், மண்டல அளவில் 913 பேர் கலந்துகொண்டனர். அந்தப் போட்டிகளில் தேர்வான 182 பேருக்கு மாநில அளவிலான இறுதிப் போட்டி கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறவுள்ளது.

**26-10-2024, சனிக்கிழமை**

| வருவாய் மாவட்டம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் |
|---|---|---|
| சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, புதுச்சேரி, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், கரூர், திருப்பூர், கோவை | அன்பகம், தி.மு.க. இளைஞர் அணி அலுவலகம். 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-18. | திண்டுக்கல் ஐ.லியோனி, கோவி.லெனின், வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, சூர்யா கிருஷ்ணமூர்த்தி |
| ஈரோடு, நீலகிரி, திருச்சி, பெரம்பலூர், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி | சர்.பிட்டி.தியாகராயர் அரங்கம், தியாகராய நகர், சென்னை-17 | முனைவர் சபாபதி மோகன், நாஞ்சில் சம்பத், வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, கா.அமுதரசன் |

**பேச்சுப் போட்டிக்கான விதிமுறைகள் :**

● இறுதிப் போட்டிக்கு வரும் போட்டியாளர்கள் 25-10-2024 மாலைக்குள் சென்னை வந்து சேர வேண்டும். ● போட்டியாளர்கள் பெற்றோர்களில் ஒருவரை உடன் அழைத்து வரலாம். ● 25.10.2024 மாலை முதல், பரிசளிப்பு விழா நடைபெறும் 27.10.2024 மதியம் வரை போட்டியாளர்கள் அவசியம் சென்னையில் இருக்க வேண்டும். போட்டியாளர்களுக்கும் உடன் வரும் ஒரு நபருக்கும் மூன்று நாள்களுக்குத் தங்குமிடமும், உணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

● 26-10-2024 அன்று சரியாக காலை 9 மணிக்கு மாநில அளவிலான இறுதிப்போட்டி தொடங்கும்.

● **என்றென்றும் பெரியார்-ஏன்?** ● **அண்ணாவும் மாநில சுயாட்சியும்** ● **கலைஞர் - நவீன தமிழ்நாட்டின் சிற்பி**

● **திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின்** ● **தமிழ்நாட்டுக் குடும்பங்களில் தி.மு.க**

● மேற்கண்ட ஐந்து தலைப்புகளில் நடுவர்கள் தேர்ந்தெடுத்த ஒரு தலைப்பின்கீழ், போட்டியாளர்கள் பேச வேண்டும். எனவே ஐந்து தலைப்புகளில் எந்தத் தலைப்பைக் கொடுத்தாலும் பேசுவதற்கு ஏற்ற வகையில், போட்டியாளர்கள் தயார் செய்து கொள்ளவும். ● பேசுவதற்கான கால அளவு 5 நிமிடங்கள். மூன்று நிமிடங்கள் முடிந்ததும் முதல் எச்சரிக்கை மணி ஒலிக்கும். இரண்டாவது எச்சரிக்கை மணி ஒலித்ததும், போட்டியாளர்கள் தங்கள் உரையை நிறைவு செய்யவேண்டும்.

**போட்டியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் அன்பும் வாழ்த்தும்.**

அன்பகம், சென்னை – 18.
நாள் : 23-10-2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி